# ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலப் பாதுகாப்புப் பல்கலைக்ழகம்

## பதவி வெற்றிடங்கள்

## எழுதுநர் மற்றும் இணைந்த தரங்கள்

**கொத்தலாவலப் பாதுகாப்புப் பல்கலைக்கழகம் - ரத்மலான மற்றும் தெற்குப் பல்கலைக்கழகம் - சூரியவெவ**

**01. முகாமைத்துவ உதவியாளர் பதவி (எழுநூர் சேவைகள்) தரம் III**
**சம்பள அளவுத்திட்டம்**
U-MN I (III) - ரூ. 30,725 - 17x300 - 35,825 மாதாந்தம்

**<u>ஆகக்குறைந்த தகைமைகள்</u>**
**<u>வெளிவாரி வகுதி</u>**

01. பின்வரும் பாடங்களில் திறமைச்சித்திகள் அடங்கலாக க.பொ.த. (சா/த) பரீட்சையில் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

- சிங்கள மொழி/தமிழ் மொழி
- ஆங்கில மொழி/ஆங்கில இலக்கியம்
- கணிதம்

அத்துடன்

- க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஒரே அமர்வில் எல்லா பாடங்களிலும் (பொதுப் பரீட்சைப் பாடம் தவிர) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

பின்வரும் தகைமைகளையுடையவர்களுக்கு முந்துரிமை வழங்கப்படும்:

- ஒரு அங்கீகரிக்கப்பட்டுள்ள நிறுவனத்திலிருந்து ஆறு (06) மாதங்களுக்கு குறையாத கால ஒரு ஏற்றுக்கொள்ளக் கூடிய கணனிப் பிரயோகங்கள் பற்றிய தகைமை.

அத்துடன்

- கணனிப் பிரயோகப் பொதிகளின் பிரயோகத்தில் இரண்டு வருட கால அனுபவம்.

**<u>உள்வாரி வகுதி (மட்டுப்படுத்தப்பட்ட)</u>**

- ஆகக்குறைந்தது இரண்டு திறமைச்சித்திகள் அடங்கலாக இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் க.பொ.த. (சா/த) பரீட்சையில் ஆறு (06) பாடங்களுக்கு குறையாத பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

- ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலப் பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தில் உள்ள ஒரு ஆரம்ப நிலைப் (U-PL) பதவியை வகிப்பவராக இருத்தல் மற்றும் U-PL சம்பளக் குறியீட்டினால் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள ஒரு சம்பள அளவுத்திட்டத்தில் உள்ளடங்கும் ஒரு ஆரம்ப நிலைப் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல்.

அத்துடன்

- ஜெனல் சேர் ஜோன் கொத்தலாவலப் பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தில் உரிய திகதிக்கு முன்னர் ஆரம்ப நிலை (U-PL சம்பள வகுதி) நிரந்தர நியமனத்தில் அகக்குறைந்தது ஐந்து (05) வருட தொடர்ச்சியான திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்திசெய்திருத்தல்.

**வயதெல்லை:** விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்கு குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் (உள்ளகப் பரீட்சாத்திகளுக்கு இந்த வயதெல்லை ஏற்புடையதாகாது).

**<u>தேர்ந்தெடுக்கும் முறை</u>**

**பின்வரும் பாடங்களில் எழுத்துமூலப் பரீட்சையில் (75% புள்ளிகள்)**

- சிங்கள மொழி/தமிழ் மொழி மற்றும் ஆங்கில மொழி அறிவு
- நுண்ணறிவு மற்றும் பொது அறிவு
- கணனி அறிவு

**நேர்முகப் பரீட்சை (25% புள்ளிகள்)**

*வினாத்தாள்கள் ஆங்கில மொழியிலும் சிங்கள மொழியிலும் காணப்படும்.

**கொத்தலாவலப் பாதுகாப்புப் பல்கலைக்கழகம் - ரத்மலான**

**02. நூலகத் தகவல் உதவியாளர் தரம் III பதவி**
**சம்பள அளவுத்திட்டம்**
U-MN I (III) - ரூ. 30,725 - 17x300 - 35,825 மாதாந்தம்

**<u>ஆகக்குறைந்த தகைமைகள்</u>**
**<u>வெளிவாரி வகுதி</u>**

- பின்வரும் பாடங்களில் திறமைச்சித்திகள் அடங்கலாக க.பொ.த. (சா/த) பரீட்சையில் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்:

- சிங்கள மொழி/தமிழ் மொழி
- ஆங்கில மொழி/ஆங்கில இலக்கியம்
- கணிதம்

அத்துடன்

- க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஒரே அமர்வில் எல்லா பாடங்களிலும் (பொதுப் பரீட்சைப் பாடம் தவிர) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(இந்த நோக்கத்தின் நிமித்தம் ஒரே அமர்வில் பழைய பாடத்திட்டத்தின் கீழ் 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் போதுமானதாகும்).

அத்துடன்

- பின்வரும் தகைமைகளையுடையவர்களுக்கு முந்துரிமை வழங்கப்படும்:

- ஒரு அங்கீகரிக்கப்பட்டுள்ள நிறுவனத்தில் நூலகத் தகவல் விஞ்ஞானத்தில் மாணவராகவிருத்தல் அல்லது பகுதிநேர/முழுநேர தகைமையைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

- ஒரு அங்கீகரிக்கப்பட்டுள்ள நிறுவனத்திலிருந்து ஆறு (06) மாதங்களுக்கு குறையாத கால ஒரு ஏற்றுக் கொள்ளக் கூடிய கணனிப் பிரயோகங்கள் பற்றிய தகைமை.

**<u>உள்வாரி வகுதி</u>**

- பின்வரும் பாடங்களில் சித்திகள் அடங்கலாக ஆகக்குறைந்தது மூன்று (03) திறமைச்சித்திகளுடன் க.பொ.த. (சா/த) பரீட்சையில் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்:

- சிங்கள மொழி/தமிழ் மொழி
- ஆங்கில மொழி/ஆங்கில இலக்கியம்
- கணிதம்

அத்துடன்

- ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலப் பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் நூலகத்தில் உள்ள ஒரு ஆரம்ப நிலை நிரந்தரப் (U-PL) பதவியை வகிப்பவராகவும், U-PL சம்பளக் குறியீட்டினால் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள ஒரு சம்பள அளவுத்திட்டத்தில் உள்ளடங்கும் ஆரம்ப நிலையில் ஐந்து (05) வருட கால திருப்திகரமான சேவை அனுபவத்தையும் பெற்றவராகவும் இருத்தல்.

*ஒரு அங்கீகரிக்கப்பட்டுள்ள நிறுவனத்தில் ஆறு (06) மாதத்திற்கு குறையாத ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு கணனிப் பிரயோகங்கள் தகைமையைப் பெற்றுள்ளவர்களுக்கு முந்துரிமை அளிக்கப்படும்.

**வயதெல்லை:** விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் (உள்ளகப் பரீட்சாத்திகளுக்கு இந்த வயதெல்லை ஏற்புடையதாகாது) வேண்டும்.

**தேர்ந்தெடுக்கும் முறை:- ஒரு பொதுஉளச்சார்பு பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம்**

- சிங்கள மொழி/தமிழ் மொழி மற்றும் ஆங்கில மொழி அறிவு
- நுண்ணறிவு மற்றும் பொது அறிவு
- கணனி அறிவு
- விடய அறிவு

*வினாத்தாள்கள் ஆங்கில மொழியிலும் சிங்கள மொழியிலும் காணப்படும்.

**<u>பொது நிபந்தனைகள்</u>**

- ஒரு இலங்கைப் பிரஜையாகவும் நல்லொழுக்கமுடையவராகவும் இருத்தல்.

- தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் ஊழியர் சேமலாப நிதியத்தின் உறுப்பினர்களாக கருதப்படுவார்கள். இவர்கள் இவர்களின் மாதாந்த சம்பளத்தில் 10% வீதத்தை ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புச்செய்ய வேண்டும். இதேநேரம் தொழில்தருநர் இவர்களின் சம்பளத்தில் மொத்தம் 15% வீதத்தை பங்களிப்புச்செய்வார். 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதிய சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சம்பளத்தில் மூன்று (3%) வீதம் பல்கலைக்கழகத்தினால் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு பங்களிப்புச்செய்யப்படும்.

- நியமனம் பற்றிய ஏனைய நிபந்தனைகள் 1981 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலப் பாதுகாப்புப் பல்கலைக்கழக சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும், அவ்வப்பொழு திருத்தப்படலாம் எனும் ஏதாவது சட்டங்களுக்கும், கட்டளை சட்டங்களுக்கும், குறித்த சட்டத்தின் கீழ் ஆக்கப்படும் துணைச்சட்டங்களுக்கும், ஒழுங்குவிதிகளுக்கும், விதிமுறைகளுக்கும் அமைவாகக் காணப்படும்.

- பல்கலைக்கழகங்களில் / நிறுவனங்களில் / அரசாங்கத் திணைக்களங்களில் / கூட்டுத்தாபனங்களில் அல்லது நியதிச்சட்ட சபைகளில் பணியாற்றும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்களத் தலைவர்களின் ஊடாக அனுப்பிவைக்க வேண்டும்.

- விண்ணப்பதாரர்களை நேர்முகப் பரீட்சைக்கு பட்டியல்படுத்த பல்கலைக்கழகத்திற்கு முழு உரிமையும் உண்டு.

- பிறப்புச்சான்றிதழ், க.பொ.த. சா/த மற்றும் க.பொ.த. உ/த சான்றிதழ்கள் மற்றும் அனுபவம் பற்றிய ஏனைய உரிய சான்றிதழ்கள் என்பவற்றின் பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

- KDU பல்கலைக்கழக இணையத்தளத்திலிருந்து கீழிறக்கம்செய்யக்கூடிய மாதிரிப்படிவத்தில் விண்ணப்பிக்குமாறு விண்ணப்பதாரர்கள் கடுமையாக அறிவுறுத்தப்படுகின்றார்கள். மேலும் பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்களும், பூரணமாக்கப்படாத விண்ணப்பங்களும் மற்றும் குறித்த மாதிரிப்படிவத்திற்கு இணங்க தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும் மற்றும் மேலே 04 ஆம் இலக்கப் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை அனுசரிக்காத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

- விண்ணப்பிக்கப்படும் பதவி விண்ணப்பத்தை தாங்கிவரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் எழுதப் படுதல் வேண்டும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பதிவுத் தபாலில், **"பதிவாளர், ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலப் பாதுகாப்புப் பல்கலைக்கழகம், ரத்மலான"** என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2024……………..